# கொக்குவில் இந்துக் கல்லூரி
# பழைய மாணவர் சங்கம் (கனடா)
## KOKUVIL HINDU COLLEGE
## OLD STUDENTS ASSOCIATION (CANADA)
## 2018

# *18 வயதுக்கு உட்பட்டோர் – ஆண் / பெண்*

# பண்ணிசைப் போட்டி

*18 வயதுக்கு உட்பட்டோர் – ஆண் / பெண்*

பண்ணிசைப் போட்டி

குறிப்பு:

1. பின்வரும் தேவாரங்களில் ஒன்றினை மனனம் செய்து பண்ணுடன் பாடுக.
2. இசைக்கருவிகள் அனுமதிக்கப்படமாட்டாது.

01. மாதர்ப் பிறைக்கண்ணி யானை — பண்- காந்தாரம்
மலையான் மகளொடும்பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவார் அவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல்
ஐயா றடைகின்றபோது
காதல் மடப்பிடி யோடும்
களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப்பாதங்
கண்டறியாதன கண்டேன்.

02. மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை — பண் - புறநீர்மை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநாயகனால் வேதமும்
பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாயாவதும் இதுவே.

03. சலம்பூவொடு தூபம் மறந்தறியேன் — பண் - கொல்லி
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம்என் னாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூளை தவிர்த்தருள்வாய்
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே